# வணக்கம்

அரசியல் விமர்சகன் என்ற முத்திரை என் விருப்பத்தை மீறி என் மீது பலமாக விழுந்துவிட்ட காரணத்தால், நான் அக்கறை காட்டும் இதர பல விஷயங்கள் பற்றிய என் பார்வைகள் போதிய கவனம் பெறாமல் போயிருக்கின்றன. நாடகம், திரைப்படம், ஆண் - பெண் உறவுகள், பாலியல் கல்வி, திருமண முறை, இளைஞர், மகளிர் நலன், சூழல் பாதுகாப்பு போன்றவை அவற்றில் சில.

என் 25 வது வயதில் 1977ல், சுய பால் உறவு பற்றிய தமிழின் முதல் நாடகத்தை எங்கள் பரீக்ஷா குழு அரங்கேற்றியிருக்கிறது. அதற்கும் முன்பே, சுயபால் விழைவு உடைய இருவரிடையே திருமணம் நிகழ்வதால் ஏற்படும் நிலை பற்றிய என் சிறுகதை தினமணி கதிரில் வெளியானது. 1996ல் சிறுகதை தினமணி கதிரில் வெளியானது. 1996ல் ஆனந்த விகடனில் நான் எழுதிய தவிப்பு நாவலில் ஆண்-பெண் உறவு தொடர்பான கதைப் பகுதிகளும் பாலியல் தொழிலாளருடன் நான் நடத்திய நாடகப் பட்டறையில் உருவாக்கிய நாடகமும், அரசியல் விமர்சனப் பரபரப்புகளை மீறிய வாசகர் கவனத்தைப் பெற இயவில்லை.

எனினும் தொடர்ந்து நம் சிறுவர் சிறுமியர், இளைஞர்களுடன் உறவாடும் ஒவ்வொரு தருணமும், பாலியல் கல்வி, வாழ்க்கைக் கல்வி முதலான பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்படவேண்டிய அவசரத்தை நான் உணர்ந்தேன். நம் குடும்பங்கள் நம் குழந்தைகளை நடத்தும் விதம் பற்றிய சுய விமர்சனம் உடனடியாக தேவைப்படுவதையும் புரிய முடிந்தது. என் வயதில் மூன்றில் ஒரு பங்குக்கும் கீழுள்ளவர்கள் பலரும் என்னுடன் நெருக்கமாக நம்பிக்கையோடு பலவற்றைப் பகிர்ந்து கொள்ளும் போதெல்லாம், நம் குடும்ப அமைப்பின் மாபெரும் ஓட்டைகள் பளிச்சிட்டன.

நம் சமூகத்தில் இருக்கும் பல சிறப்புகளின் வேர்களைப் போலவே, பல கோளாறுகளின் வேர்களும் நம் குடும்பத்தில், குடும்ப அமைப்பில், குடும்பங்களின் வாழ்க்கை முறையில், குடும்பத்தில் நிலவும் உறவுகளின் தன்மையில் இருப்பதாக நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன்.

வெகுஜன இதழில் பாலியல், வாழ்க்கைக் கல்வி பற்றிய தொடர் ஒன்றை எழுதவேண்டுமென்று பல வருடங்களாகவே நான் யோசித்துக் கொண்டிருந்தேன். காம உணர்ச்சியைத் தூண்டும் சினிமா கவர்ச்சிப் படங்களைப் பக்கம் பக்கமாக வெளியிடுவதில் கூச்சமே இல்லாத இதழ்கள், உடற்கூறு படங்களுடன் ஒரு தொடரை வெளியிட அஞ்சி அஞ்சி சாகும் சூழல் தான் பெருமளவும் இன்னமும் இருக்கிறது. முதல் வகைப் படங்களுக்கு முகம் சுளிக்காத நம் குடும்பங்கள் மருத்துவப் படங்களினால் பண்பாடே கெட்டுப் போய்விட்டதாகப் புலம்பும் அபத்தம் எரிச்சலூட்டுகிறது.

2007ல் விகடனில் முக்கிய பொறுப்புகளை வகித்த என் இளம் சகாக்கள் அசோகன், கண்ணன், நிர்வாக இயக்குநர் பா.ஸ்ரீனிவாசன் மூவருடனும் தொடர்ந்து விவாதித்ததில் இந்தத் தொடர் வெளிவருவது சாத்தியப்பட்டது.

பெருவாரியான வாசகர்களிடமிருந்து இந்தத் தொடருக்குக் கிடைத்த அழுத்தமான வரவேற்பு என்னை இந்த நொடியில் நினைத்தாலும் நெகிழச் செய்கிறது. யார் என்ன சொன்னாலும் இந்தத் தொடரை தயவுசெய்து பாதியில் நிறுத்திவிடாதீர்கள்

என்று என்னிடம் போனில் கெஞ்சும் தொனியில் உரிமையோடும் பதற்றத்தோடும் பேசிய பல இளம் அன்னையரின் குரல்கள் இன்னமும் என் செவிக்குள் ஒலிக்கின்றன. "ஏன் உருப்படாத அரசியல்வாதிகள் பற்றி எழுதி உங்கள் நேரத்தையும் சக்தியையும் இதுவரை வீணாக்கிக் கொண்டிருந்தீர்கள்? இது போன்ற துறைகளில் இன்னும் அதிகம் எழுதியிருக்கலாமே', என்று செல்லமாகக் கடிந்து கொண்ட வாசகர்கள் பலர், 'ஓ' பக்கங்களை விட அதிகமான வாசகர்களை எனக்குப் பெற்றுத் தந்த தொடர் இது.

இந்த தொடரில் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயங்கள் ஒரு நூலில் முடிவன அல்ல. இன்னும் பல பாகங்கள இதைத் தொடர்ந்து எழுத வேண்டிய அவசியம் இருக்கிறது. நான் குறைந்தபட்சம் இன்னும் ஒரு பாகமேனும் எழுதுவேன். இவை தொடர்பாக மேலும் மேலும் தேடிப் பிடித்து படித்து அறிவதற்கு, பல அறிஞர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் எழுதிய ஏராளமான புத்தகங்கள் உள்ளன. அவர்களையெல்லாம் நான் தேடி சென்றதன் விளைவே இந்தத் தொடர். வாசகரிடம் தொடர்ந்து இத்தகைய தேடலுக்கான ஆசையைத் தூண்டுவதே என் நூலின் நோக்கம்.

தமிழகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடத் திட்டத்தின ஒரு பகுதியாக வாழ்க்கைக் கல்வி, பாலியல் கல்வி ஆகியவை இடம் பெறவேண்டும், ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் சிறுவர்/ இளைஞர்களுக்கான முழு நேர ஆலோசகர்கள் (கவுன்செலர்கள்) நியமிக்கப்பட வேண்டும். ஆசிரியப் பயிற்சியிலேயே கவுன்செலிங் பயிற்சியும் இணைக்கப்பட வேண்டும். நம் குடும்பங்களில் அனைவருக்குமிடையில் அன்பும் அறவும் சமத்துவ உறவும் சுடர் விடும் சூழல் மலரவேண்டும். இந்தக் கனவுகளை நனவாக்கு வதை நோக்கி ஒரே ஒரு அடி எடுத்து வைக்கவேணும் என் இந்த நூல் பயன்பட்டால் பெரிதும் மகிழ்வேன்.

பிறந்த மாதத்தின் உற்சாக மன நிலையில்

**அன்புடன்**

**முதல் பதிப்பின் முன்னுரை**

